**செய்தி வெளியீடு எண் : 2271** **நாள் : 14.11.2023**

**செய்தி வெளியீடு**

**<u>2023-2024 ஆம் ஆண்டு 23 வதுஅஞ்சல்வழி / பகுதிநேர (மாறுதலுக்கு உட்பட்டது) கூட்டுறவு மேலாண்மை பட்டயப் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன</u>**

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் அங்கமாக சென்னை மாவட்டத்தில் செயல்படும் சென்னை கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில், 2023-2024 ஆம் ஆண்டு 23 வது அஞ்சல் வழி / பகுதிநேர (மாற்றத்திற்குட்பட்டது) கூட்டுறவு மேலாண்மை பட்டயப் பயிற்சி (புதிய பாடத்திட்டத்தின்படி) விரைவில் துவங்கப்படவுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் www.tncuicm.comஎன்ற இணையதள முகவரியில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். இணையதளத்தில் உத்தேசமாக 10.11.2023 முதல் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப கட்டணம் ரூ. 100/-ஐ இணைய வழியில் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும்.

10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று +2 தேர்ச்சி பெற்ற கல்வித்தகுதியுடைய அனைவரும் விண்ணப்பிக்கலாம். பயிற்சி தொடர்பான விவரங்களை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் www.tncuicm.comஎன்ற இணையதளத்தில் மூலம் தெரிந்துகொள்ளலாம். மேலும், அந்தந்த மாவட்ட கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் மற்றும் மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களை அணுகி விவரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in